



சேலம் மத்திய மாவட்டக் கழக அவசர செயற்குழுக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் தீர்மானங்கள் விளக்கிப் பேசினார். கூட்டத்தில் மத்திய மாவட்ட பொருளாளர் கார்த்திகேயன், மாநகர செயலாளர் ரகுபதி, மாநகர மேயர் ராமச்சந்திரன், மற்றும் மாவட்ட மாநகர ஒன்றிய பகுதிகழக செயலாளர்கள் உள்ளிட்ட ஏராளமானுர் கலந்து கொண்டனர்.

### கழக அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கி

# சேலம் மத்திய மாவட்டம் முழுவதும் பிரச்சாரம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிவிப்பு!

சேலம், மே 8-

தமிழ்நாடு முதலமைச்சரின் நான்கு ஆண்டுகால மக்கள் நலத்திட்டங்களை பொது மக்களிடையே எடுத்துரைக்கும் வகையில் சேலம் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் தெருமுனை கூட்டங்கள் நடத்திட வேண்டும் என்று மாவட்ட அவசர செயற்குழு கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் வலியுறுத்தி யுள்ளார்.

சேலம் மத்திய மாவட்ட திமுக அவசர செயற்குழு கூட்டம் மாவட்ட திமுக அலுவலகமான கலைஞர் மாளிகையில் நடைபெற்றது.

மத்திய மாவட்ட அவைத்தலைவர் சுபாஷ் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் மாவட்ட செயலாளரும் சுற்றுலாத்துறை அமைச்சருமான ராஜேந்திரன் கலந்து கொண்டு திமுக நிர்வாகிகளுக்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

கூட்டத்தில் அவர் பேசும் பொழுது, தமிழ்நாடு முதலமைச்சர் கடந்த நான்கு ஆண்டுகளில் நிறைவேற்றிய பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை பொது மக்களிடையே எடுத்துரைக்கும் வகையில் அடுத்து வரும் ஐந்து நாட்களில் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் தெருமுனை கூட்டங்கள் நடத்திட வேண்டும் என்று பேசிய அவர், மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட 13 பகுதிகள் மற்றும் ஏழு ஒன்றியங்கள் ஒவ்வொரு பகுதிகள், 4 பேரூராட்சி பகுதிகளிலும் தலா 4 கூட்டங்கள் நடத்திட வேண்டும் என்று கூறிய அவர், தேர்தல் பணிகளை தற்போது முதலில் துவங்கிட வேண்டும் என்றும் வாக்குச்சாவடி முகவர்கள் வீடு வீடாக சென்று தமிழ்நாடு முதலமைச்சரின் சாதனைகளை துண்டு பிரசங்கங்களாக விநியோகிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

கூட்டத்தில் மத்திய மாவட்ட பொருளாளர் கார்த்திகேயன், மாநகர செயலாளர் ரகுபதி, மாநகர மேயர் ராமச்சந்திரன், மற்றும் மாவட்ட மாநகர ஒன்றிய பகுதிகழக செயலாளர்கள் உள்ளிட்ட ஏராளமானுர் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசு நிகழ்த்தியுள்ள நான்காண்டு சாதனைகள் குறித்து இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஏற்பாட்டில் ”திராவிட மாடல் ஆட்சியில் பல்வேறு சாதனை விளக்க அணிவகுப்பை நேற்று (7.5.2025), சென்னை, பெரம்பூர். பேப்பர் மில்ஸ் சாலை, லூர்து பெண்கள் மேல்நிலைப்பள்ளி அருகில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மேயர் ஆர்.பிரியா, வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, அ.வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல். நடிகர்கள் ‘மெட்ராஸ் அன்பு’ கலையரசன், ‘பிக்பாஸ் புகழ்’ அர்ச்சனா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.ரவிச்சந்திரன், பகுதி செயலாளர்கள் ஐசிஎப்.முரளிதரன், நாகராஜன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சந்துரு, மகேஷ்குமார், மாநகராட்சி மண்டலக் குழுத்தலைவர்கள் சரிதா மகேஷ்குமார், பி.கே.மூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! பெங்களூரு போர்முரசு கதிரவன் சிறப்புரை!

# வில்லிவாக்கம் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

## தயாநிதிமாறன் எம்.பி - அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ. பங்கேற்பு! கூ.பீ.ஜெயின் தலைமை!

சென்னை, மே. 8-

சென்னை கிழக்கு மாவட்டம் வில்லிவாக்கம் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் 4 ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் நாளை (09.05.2025 - வெள்ளிக்கிழமை) மாலை 6.00 மணிக்கு, வில்லிவாக்கம் சிவன் கோயில் வடக்கு மாட வீதி, பேருந்து நிலையம் அருகில் நடைபெறுகிறது.

வில்லிவாக்கம் மேற்கு பகுதிச் செயலாளரும், 8 வது மண்டலக் குழுத் தலைவருமான கூ.பீ.ஜெயின் தலைமை வகிக்கிறார்.

சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் , அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றி அழகன், வில்லிவாக்கம் கிழக்கு பகுதிச் செயலாளர் வே.வாசு, பொதுக்குழு உறுப்பினர் சாவித்திரி ஸ்ரீ வீரராகவன், டி.வி.செம்மொழி எம்.சி., மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சுதா தீனதயாளன் எம்.சி., மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வானவில் விஜய், லதா வாசு எம்.சி., ஆர்.வரதன், ஜி.ஜெ.பிரபு, எம்.சுரேஷ், ஜெ.எஸ்.பிரபு, வி.து. ராமமூர்த்தி, பா.இளையா, மு.கலைச்செல்வி, ஐ.சி. எப்.சுரேஷ்பாபு, சிட்கோ சேகர், க.சுகுமாரன், பா. ஜானி, சொ.முருகேசன், ப.லோகுபாபு, ஆர்.கோபாலகிருஷ்ணன், சிட்கோ பி. சுரேஷ்பாபு, கோ.மணி வேந்தன், மா.கபிலன், பா.தே.தீனதயாளன், கே. எஸ்.பாபு, க.மணிமாறன், எஸ்.கே.பி.தீபக்குமார், ம. சுந்தர் எபி, ஆ.சக்திவேல், பூ.சத்தியேந்திரன் ஆகியோர் வரவேர்புரையற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் தலைமைக் கழக பேச்சாளர் பெங்களூரு போர்முரசு கதிரவன், வழக்கறிஞர் இந்திரஜித், காஞ்சி வெ.பாஸ்கர் ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

தலைமை பொதுக்குழு உறுப்பினர், மேயர் பிரியா, கழக துணை அமைப்புச் செயலாளர் ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., தலைமை செயற்குழு உறுப்பினர், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவன தலைவர் ப.ரங்கநாதன், வில்லிவாக்கம் தொகுதி பார்வையாளர் ஓ.ஏ.நாகலிங்கம், கே.எஸ்.ரவிச்சந்திரன், பி.கே.மூர்த்தி எம்.சி., கே.சந்துரு, சி.மகேஷ்குமார், சங்கரிநாராயணன், எஸ்.மணிமூடி, கே.எஸ்.எம்.நாதன், எம்.விஜயகுமார், என்.வி. எம்.ஷேக்அப்துல்லா, வே. உமாகாந்த, பரிதி இளம்சுருதி எம்.சி., கோ.ஏகப்பன், தேவஜவகர், ஜி.மகாதேவன், புனிதவதி எத்திராசன், இசட்.ஆசாத், சொ.வேலு எம்.சி., சரிதாமகேஷ்குமார் எம்.சி., பா. ஸ்ரீராமுலு எம்.சி., டாக்டர் ஜி.சாந்தகுமாரி எம்.சி., ஐ.சி.எப்.வா.முரளிதரன், எ.நாகராசன் எம்.சி., டி. எஸ்.பி.ராஜாகோபால் எம்.சி., எம்.டி.ஆர்.நாகராஜ், செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, வி.சுதாகர், எஸ். முரளி, எஸ்.இராஜசேகர்,

எஸ்.பன்னீர்செல்வம், கோ. மணி,பி.ஜெ.துளசிங்கம், லயன் பி.உதயசங்கர், ரமேஷ் (எ) நீலகண்டன் எம்.சி., எம்.இப்ராஹிம் கனி, அ.நிர்மலாதேவி, டாக்டர். ஏ.பி.பூர்ணிமா எம்.சி., இரா.கலைச்செல்வி, ஜெ. பாலமுருகன், பா.ஜெகதீஷ், க.வினோத், எஸ்.தனசேகர், ஆர்.டி.சங்கர்நானா, நா. துலுக்காணம், எல்.பி.எப். மோகன், துரைகண்ணன், ஜி.தாமோதரன், ராஜேஸ் வரிஸ்ரீதர் எம்.சி., ஜி.வி. நாகவள்ளி எம்.சி., எம். பெரோஸ்கான், பி.விஜயகுமார், எம்.விநாயகம், ஆர்.எஸ்.சித்திக், ம.அசோக்குமார், க.பா.பிரதீப்குமார், கு.கிருஷ்ண முர்த்தி, எல்.சம்பத்குமார், கா.ராஜ்முகமது, து.ஆயிரம், இரா.வீரமணி,

புரசை டி.சம்பத், டி. தாமோதரன், w.அமுல், நா.அறிவுடைநம்பி, எ.வேதா, விக்னேஷ் சீனிவாசன், ச.மனோகரன், கே.பாஸ்கர், சி.தேவராஜ், காஞ்சி செ.துரை, வி.சபாபதி, வ.ரமேஷ்பாபு, மு.பரமானந்தன், டி.ஸ்டாலின், ந.குமார், எ.சத்திய நாராயணன், கி.ஜெய்சங்கர், ப. செந்தில்குமார், எஸ்.துரைபாபு, கே.ராஜா, வி.ஆர். ஜெயக்குமார், ப.மலர்கொடி, சிட்கோ எஸ்.அன்வர்தீன், சாந்திபில்லி, தே.ச. சுந்தர், ஜி.கே.வெங்கட் மற்றும் கழக முன்னோடிகள், பாக முகவர்கள் (BLA-2), பாக உறுபினர்கள் (BLC) அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

இந்நிகழ்ச்சிக்கு வட்டச் செயலாளர்கள் ஆர்.தீனதயாளன், மா.அகிலன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

இவ்வாறு வில்லிவாக்கம் மேற்கு பகுதிச் செயலாளரும், மண்டலக்குழு தலைவருமான, கூ.பீ.ஜெயின் அறிக்கை விடுத்துள்ளார்.


